தனிச்சுற்றுக்கு மட்டும்



சன் பிரிண்டர் - தி.கோடு, செல்: 97500 20222

VIDIYAL-41-Sep2012

# விடியல் The Dawn

மாத இதழ்

பொழுது - 41
செப்டம்பர் 2012




ஆண்டாள் கோயில்
இலைக்கிளி



லிங்காய கவுண்டர்

உலகச் சுற்றுலா தினம்



# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 41,*
*செப்டம்பர், 2012 ,*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்

*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி**
**(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215,**
**தமிழ்நாடு, இந்தியா.**


E-Mail : vidiyalmagazhine@gmail.com
Blog: ksrcasthamizh.blogspot.in
Website: www.ksrcas.edu



© **K.S.R. College of Arts and Science (Autonomous)**

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


*ஆசிரியர் தினம்* 03,
*நினைத்துப் பார்க்கிறேன்* 04,
*என் நினைவுகளில்* 06,
*அம்மி மிதித்தல்* 07,
*காளிங்கராயன் கால்வாய்* 08,
*தேனீக்கள்* 09, *நாட்டுப்பண்* 20,
*குறள்முத்துக்கள்* 11, *பாடம்* 22,
*ஒலிம்பிக்கில் பெற்றதும் கற்றதும்* 23
*குழந்தைத் தொழிலாளர்* 24
*மாமல்லபுரம்* 25


## கவிதைகள்


*இரண்டாம் கடவுள்* 02, *நண்பா* 03,
*ஆசிரியர்கள்* 04, *தோழா* 05,
*கண்ணகி, வறுமை* 05, *அம்மா* 20,
*சுனாமி* 06, *எழுத்தில் வாழ்க்கை* 07,
*அன்னை, நட்பு* 10, *ஆசிரியர்* 15,
*மழையாகவே வா மழையே* 10,
*என் அன்னை* 11, *தயங்காதே* 14,
*தாயின் குரல்* 15


## சங்கச் சாரல் - 07


*எதற்கு இந்த ஏக்கம்?* 12


## சரித்திரக் கட்டுரை - 09


*ஆண்டாள் கோயில்* 16
*அஞ்சலி : எழுத்தாளர் ரா.கி.ர.* 21


## பின் அட்டை ஓவியங்கள்

*எம். சௌந்தர்யா* **III rd B.Sc.TFD**
*சோ.வை. சௌந்தர்யா* **I st B.C.A.**

# தலையங்கம்

*அனைவருக்கும் வணக்கம்!*

*குரு - ஆசிரியர். முந்தைய காலங்களில், வேத சாஸ்திரங்களை மாணவர்கள், குருகுல வாசம் செய்து படித்து வந்தனர். அதாவது, குருவின் வீட்டிலேயே தங்கி, அவருக்குப் பணிவிடைகள் செய்து, அவர் சொல்லிக் கொடுப்பதைக் கற்று வந்தனர். தன்னலமில்லாமல் கற்றுக் கொடுக்கும் குருவை, தெய்வத்துக்கு ஒப்பிட்டு,*

**“குரு பிரம்மா குரு விஷ்ணு**
**குருதேவா மகேச்வரா**
**குரு சாக்ஷாத் பரம் பிரம்மா**
**தஸ்மை ஸ்ரீ குருவே நமஹா!”**

*என்றும் சொல்லியிருக்கின்றனர்.*

*பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் இவர்கள் குரு தேவர்கள் ஆவர்கள். குருவின் அன்றாட நடவடிக்கைகள், எண்ணங்கள், சொற்கள் ஆகியவை உண்மையைப் பிரதிபலிக்கும். அதனால் குருவானவர் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் முதலானோர்களுக்குச் சமமாகக் கருதப் படுகிறார்.*

*ஒழுக்கத்தை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதால் அவர் பிரம்மாவாகக் கருதப்படுகிறார். மாணவர்களிடம் உள்ள நல்ல பழக்கங்களைப் பாதுகாப்பதால் அவர் விஷ்ணுவாகக் கருதப்படுகிறார். மாணவர் களிடம் உள்ள தீய குணங்களை அழிப்பதால் அவர் மகேஸ்வரராகக் கருதப்படுகிறார். இந்த மூன்று பணிகளையும் செய்வதால் அவர் மும் மூர்த்திகளுக்குச் சமமாகப் போற்றப்படுகிறார்.*

*அனைவருக்கும் ஆசிரியர் தின நல் வாழ்த்துகள். நன்றி!*

*- இணை ஆசிரியர்*

# இரண்டாம் கடவுள்

**எஸ்.கே. லாவண்யா**
இளங்கலை
உயிர்த்தொழில்நுட்பத்துறை
முதலாண்டு

*“முன்பு நாங்கள்*
*பாறைகளாக இருந்தோம்.*
*நீங்கள் போதித்ததால்*
*இப்போது நாங்கள்*
*சிலைகளாக, ஓவியங்களாக*
*உருப்பெற்றோம்.*
*உங்கள் பேரன்பினால்*
*நாங்கள் உயிருள்ள*
*சிலைகளானோம் -*
*ஓவியங்களானோம்.*
*எங்களைப் படைத்த கடவுள்*
*எங்களுக்கு முதற்கடவுள்.*
*எங்களை உருவாக்கிய*
*நீங்களோ எங்களுக்கு*
*இரண்டாம் கடவுள் ”*

☺

## ஆசிரியர் தினம்

**கே. உமாமகேஸ்வரி**
இளங்கலை கணிதம் முதலாண்டு
'ஆ' பிரிவு

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளினை (செப்டம்பர்,05) ஆசிரியர்தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

நமக்குக் கல்வி கற்றுத்தரும் ஆசிரியர் நம்மிடம் அறிமுகமானது எவ்வாறு?

குழந்தை பிறந்ததும் தாய்க்கு அறிமுகமாவது மருத்துவரால். தந்தைக்கு அறிமுகமாவது தாயால். தாயாலும் தந்தையாலும் குழந் தைக்கு அறிமுகமாபவர் ஆசிரியர்.

கல்விச்செல்வத்தைக் குழந்தைக்கு வழங்கும் கொடைவள்ளல் ஆசிரியர்.

கல்வியெனும் அழியாச் செல்வத் தைப் பெற்ற மாணாக்கர்கள், தங்கள் வாழ்வில் எல்லா நிலைகளிலும் வெற்றி பெறுகின்றனர்.

ஒருவரின் வெற்றிக்குப் பின்னணியாக இருப்பவர் அவரது ஆசிரியர்தான்.

*"கல்வி என்னும்*
*சாவியைக்கொண்டு*
*அறியாமை என்னும்*
*பூட்டைத் திறந்து*
*வாழ்க்கை என்னும்*
*வீட்டிற்குள் நுழைந்து*
*அறிவொளி என்னும்*
*கல்விச்சுடரை ஏற்றிய*
*இரண்டாம் பெற்றோரான*
*ஆசிரியரை வணங்குவோம்"*

## நண்பா!

**கே. அறிவழகன்**
இளங்கலை வேதியியல்
முதலாண்டு

*"நட்பு*
*இதயம் போன்றது-*
*நமக்கே தெரியாமல்*
*நமக்குள் துடிக்கும்.*
*நட்பு*
*சுவாசக்காற்றைப் போன்றது-*
*அதைப் பார்க்க முடியாது.*
*உணரமுடியும்"*

☺

## நினைத்துப் பார்க்கிறேன்

**சி.வ. காவியமதி**
இளங்கலை வேதியியல்
முதலாண்டு

என் பள்ளி வாழ்க்கையில் எனக்கு வேதியியல் பாடம் நடத்திய ஆசிரியர் உயர்திரு. எஸ். சுந்தரபாண்டியன் அவர்களை நான் பெரிதும் மதிக்கின்றேன்.

அவர் ஒரு பாடத்தை ஒருமுறை நடத்தினாலே அது எனக்கு மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடும். அவற்றை எளிதில் மறக்க இயலாது. பாடத்துடன் இணைத்துப் பாடத் தொடர்பான பல செய்திகளையும் பொது விஷயங்களையும் கூறுவார். தினமும் பாடமும் நடத்துவார். வகுப்புத்தேர்வும் நடத்துவார். வாரம்தோறும் மாணாக்கர்களை 'செமினார்' எடுக்கச்சொல்வார். மாணாக்கர்களிடம் அன்புடன் பழகுவார்.

நான் பட்டப்படிப்பில் வேதியியல் துறையைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அவர் பாடம்நடத்திய முறைதான். அவரை நான் வாழ்த்தி வணங்குகின்றேன்.

☺

## ஆசிரியர்கள்

**ப. கல்பனா**
இளங்கலை கணிதம்
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"எங்கள் வாழ்வு ஒளிபெற*
*தன் ஆயுள் இழந்து*
*ஒளிதரும் மெழுகுவர்த்திகள்!*
*சுண்ணக்கட்டியைத்*
*திருநீராய் எண்ணும்*
*தியாகச் செம்மல்கள்!*
*எங்களைத் தரம் வாய்ந்த*
*சிற்பமாக்கும் சிற்பிகள்.*
*எல்லா மாணாக்கர்களையும்*
*சமமாகப் பாவிக்கும் தாய்!*
*வாழ்வில் தடம் மாறும்போது*
*வழிகாட்டும் கலங்கரை*
*விளக்குகள்!*
*அறிவுரை கூறும்போது நண்பர்கள்!*
*கட்டளையிடும்போது தலைவர்கள்!*
*உங்கள் அன்புக்கட்டளைக்கு*
*என்றும் அடிபணியும்*
*உங்கள் குழந்தைகள் நாங்கள்."*

☺

## தோழா

**ப. முத்து**
இளங்கலை
உயிர்த்தொழில்நுட்பத்துறை
முதலாண்டு

*"அன்பிலே விதைவிதைத்து*

*ஆசையிலே செடி முளைத்து*

*பண்பிலே கொடி படர்ந்து*

*பாசத்தால் பூப்பூத்து*

*நேசத்தால் காய் காய்த்து*

*அனைத்தும் ஒன்றாகி*

*நட்பிலே பழுத்த பழம்*

*என் இதயத்தோழா"*

☺

## வறுமை

**அ. ஷன்மதி**
இளங்கலை கணினி அறிவியல்
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"பசிக்காக ஏங்கி அழும்*

*குழந்தையின் வாயில்*

*விழுந்தது*

*தாயின் கண்ணீர்த்துளி"*

☺

## கண்ணகி

**கே. கோபிகா**
இளங்கலை கணிதம்
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"கற்புக்கு*

*இன்னுமொரு பெயர்-*

*கற்புக்கு*

*இன்று வரை உள்ள*

*ஒரே பெயர்-*

*'கண்ணகி'.*

*கற்பு நெறியால்*

*காவியத்தின்*

*தலைவியானாள்.*

*மாநாய்கன் மகளாய்க்*

*கவிதையாய்ப் பிறந்து,*

*கோவலனுக்குச் சகியாகிக்*

*காவியமானவள்.*

*தேரா மன்னா! என விளித்து*

*ஒற்றைச் சிலம்புடன் நின்று*

*நெற்றிக்கண் திறந்தபோது*

*கொற்றவை (காளி) யானாள்.*

*கணவனுக்காக*

*மதுரையை எரித்தவள்*

*கற்சிலையாகிப் போனாள்.*

*கற்பவர்களைக்*

*கற்சிலையாக்கிப் போனாள்.*

*சிதைவுற்ற வாழ்வுக்குச்*

*சொந்தக்காரியானாலும்*

*சிலையாய் நிற்கிறாள்*

*நம் சிந்தையில்...”*

**(21.07.2012அன்று நடைபெற்ற காப்பியத்தமிழ் ஆய்வு மாநாட்டில் முதல்பரிசு பெற்ற கவிதை)**

## சுனாமி

**ஜி. மைதிலி**
இளங்கலை ஆங்கிலம் முதலாண்டு

“*மீனுக்கு இரையிடலாமெனக்*

*கடலை நோக்கிச் சென்றேன்.*

*என்னிடம் இருந்த இரை*

*போதவில்லையோ என்னமோ!*

*கடல்மாதா*

*என்னையே எடுத்துக் கொண்டாள்*

*இரையாக.”*

☺

## என் நினைவுகளில்...

**நா. நந்தினி**
இளங்கலை வேதியியல் முதலாண்டு

எனக்குப் பிடித்த பள்ளி ஆசிரியர் திருமதி. பூங்கோதை ஆவார். அவர் எனக்குப் பத்தாம் வகுப்புப் பாடம் நடத்தினார்.

ஆசிரியராகவும் தோழியாகவும் அவர் நடந்துகொண்டார். எந்தப் பாடத்தை நடத்தினாலும் அதனுடன் தொடர்புடைய ஒரு கதையைக் கூறித்தான் நடத்து வார். அவை என்னை மிகவும் கவர்ந்தது.

அவர்கள் நடத்திய பாடங் களும் கதைகளும் என் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டன.

யார் எவ்வாறு திட்டினாலும் அவற்றை உடனே மறந்துவிட வேண்டும் என்று கூறுவார். அதனை நான் கடைப்பிடித்து வருகின்றேன்.

இந்த ஆசிரியர் தினத்தில் நான் அவர்களை மிகவும் நன்றியுடன் வணங்குகின்றேன்.

☺

## எழுத்தில் வாழ்க்கை

**எஸ். ராஜேஸ்வரி**
இளங்கலை வேதியியல்
முதலாண்டு

*"அகில உலகின்*
*அன்பான பரிசு அன்னை.*
*ஆனந்த இல்லத்தின்*
*அழகிய பரிசு தந்தை.*
*இனிமையான இன்ப*
*வாழ்வின் பரிசு குழந்தை.*
*ஈகைப் பண்பின் பரிசு*
*நீண்ட ஆயுள்.*
*உருக்கமான அறிவின் பரிசு*
*நல்ல தொழில்.*
*ஊக்கமான உடல் நலத்தின்*
*பரிசு நல்ல முன்னேற்றம்.*
*எக்காலத்திலும் உயர்வான பரிசு*
*நன்மதிப்பும் மரியாதையும்.*
*ஏக்கமுற்ற மனத்தின்*
*பரிசு எதிர்பாராத மகிழ்ச்சி.*
*ஐயத்தினை ஒழிப்பதன்*
*பரிசு வெற்றி.*
*ஒருமுறை தவறினாலும் கிட்டாத*
*பரிசு வாய்ப்பு.*
*ஓய்ந்திருந்தால் கிட்டும் பரிசு*
*தோல்வி.*
*ஔவியம் தவிர்ப்பதன் பரிசு*
*பாராட்டும் விருதும்."*

**(உலக எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு இக்கவிதை வெளியிடப் படுகின்றது)**

## அம்மி மிதித்தல்

**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

இந்துத் திருமணச் சடங்கில் மணமக்கள் தீவலம் வந்தபின் மணப்பெண்ணை அம்மி மிதிக்கச்செய்து மணமகன் அவள் கால்விரலில் மெட்டி அணிவிப்பது வழக்கம்.

அம்மி மிதித்தல் என்பது ஒரு முதன்மைச் சடங்காக உள்ளது. அம்மி என்பது கருங்கல்லால் ஆனது. உறுதியானது. அது வளையாதது. ஆனால், தேயக் கூடியது. உடையக் கூடியது.


அந்த அம்மியைப் போல மணமகள் தன் குடும்பக் கௌரவத்தைக் காக்கத் தான் வளைந்து கொடுக்காமல் உறுதி யாக வாழவேண்டும் என்பதனை உணர்த்தவே திருமணத்தில் 'அம்மி மிதித்தல் சடங்கு' நடத்தப்படுகின்றது.

☺

# காளிங்கராயன் கால்வாய்

காளிங்கராயனின் இயற்பெயர் லிங்காய கவுண்டர். இவர் கிபி 1240ஆம் ஆண்டு பிறந்தார். இவர் கொங்குவேளாளர் இனத்தைச் சார்ந்த சாத்தாந்தை என்னும் கூட்டத்தைச் சேர்ந்தவர். 20 வயது ஆனதும் அப்பொழுது கொங்குப் பகுதியை ஆண்ட பாண்டிய மன்னன் வீரபாண்டியன் (1265-1280) படையில் சேர்ந்தார். தன் செயலாற்றலால் விரைவில் தலைமைப்பதவியை அடைந்தார். பாண்டிய மன்னன் இவரை உத்திர மந்திரி (தலைமை அமைச்சர்) ஆக்கினார். மேலும் காளிங்கராயன் என்ற பட்டத்தையும் வழங்கினார். லிங்காய கவுண்டர் என்பதன்றிக் 'காளிங்கராயன்' என்ற பெயராலயே இவர் அறியப்படுகிறார். இவரின் சிறப்பை இன்றளவும் சொல்லுவது இவரின் பணிகளே.

பவானியையும் நொய்யலையும் இணைத்து இவர் வெட்டிய பாசன கால்வாய் 'காளிங்கராயன் வாய்க் கால்' என அறியப்படுகிறது. இவ் வாய்காலை அமராவதி ஆற்றுடன் இணைக்க இவர் முடிவெடுத்து அத்திபாளையம் அருகே அணை கட்டினார். எனினும் அவரின் இத்திட்டம் நிறைவேறவில்லை. அத்திபாளையத்தில் உள்ள அணை 'ஓட்டை அணை' என்று இப்பொழுது அழைக்கப்படுகிறது.




காளிங்கராயன் வாய்க்கால் 1271ஆம் தொடங்கப்பட்டு 1283 ஆம் முடிக்கப்பட்டது. இவ் வாய்க்காலின் மொத்த நீளம் 56 மைல்கள் (90 கிமீ). பவானி, காவிரி ஆற்றுடன் கூடுவதற்குச் சற்று முன் அணை கட்டி பவானி ஆற்று நீர் காளிங்கராயன் வாய்க் காலுக்குத் திருப்பி விடப்பட்டது. 56 மைல்கள் பயணித்து நொய்யல் ஆற்றில் ஆவுடையா பாறை என்னும் இடத்தில் இவ்வாய்க்கால் சேர்கிறது.

இவ்வாய்க்கால் மூலம் ஈரோடு மாவட்டம் சிறப்பாகப் பயன டைகிறது. இவ் வாய்க்கால் தொடங்குமிடத்தில் இதன் சராசரி கடல் மட்ட உயரம் 534

அடியாகும், முடியுமிடத்தில் இதன் சராசரி கடல் மட்ட உயரம் 412 அடியாகும். இதன் மூலம் 15,743 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

இவ்வாய்க்கால் தொடங்குமிடத்திலிருந்து முடியுமிடம் வரையில் 36 மைல்கள்தானெனினும், இயற்கையாய் அமைந்த சிறுசரிவின் முழுப் பயனைப் பெறவேண்டியும் மிகுதியான நிலப்பகுதிகள் பாசனம் பெற வேண்டியும், இதனை வளைவுகளுடன் 56 மைல்கள் ஓடுமாறு செய்தார் காளிங்கராயர்.

700 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்வாய்க்கால் மாசுக்களால் பாதிப்படைந்துள்ளது. 2007இல் 12 கோடி ரூபாய் செலவில் இதை மேம்படுத்தப் போவதாக அரசு அறிவித்துள்ளது. இதற்கு தேசிய வேளாண்மை மற்றும் கிராம்புற அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க முடிவு செய்துள்ளது.

இவ்வாய்க்கால் குறித்து செ.ராசு என்பவர் சிறந்த நூல் ஒன்று எழுதியுள்ளார்.

தொகுப்பு: ***முனைவர் ப. சரவணன்***
தமிழ் விரிவுரையாளர்

☺

# தேனீக்கள்

**எஸ். சதாசிவம்**
இளங்கலை உயிர்த்தொழில் நுட்பத்துறை மூன்றாமாண்டு

தேனீக்கள் குழுக்களாகப் பிரிந்து தங்களுக்குள் வேலையைப் பங்கிட்டுக் கொண்டு தேனைச் சேகரிக்கும். தேனீக்கள் தங்கள் செய்திப் பரிமாற்றத்தை நடன அசைவுகளின் மூலம் பரிமாறிக்கொள்கின்றன.

**வட்ட நடனம்:**

பூந்தேன் 100மீட்டர் சுற்றளவிற்குள் உள்ளதைக் குறிக்கும்.

**அசைவு நடனம்:**

நீண்ட தொலைவைக் குறிக்கும்.

**பொதுவான நடன அசைவு:**

பூந்தேன், சூரியனுக்கு எந்தத் திசையில் உள்ளது என்பதனைக் குறிக்கும்.

இவற்றை ஆய்வுசெய்து விளக்கிக் கூறியமைக்காக 1973ஆம் ஆண்டு ‘கார்ல் வான் ப்ரிஷ்’ என்ற அறிஞருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

☺

## அன்னை

**நா. சிந்துஜா**
இளங்கலை கணினி அறிவியல்
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"இமைக்க மறந்தன இமைகள்*
*பேச மறந்தன இதழ்கள்*
*கேட்க மறந்தன செவிகள்*
*செயலிழந்தன கால்கள்*
*திரும்ப மறுத்தது நினைவு*
*புது உறவைச் சுமந்தது இதயம்*
*ஆம் அன்னையே!*
*உன் கருவில்*
*நான் இருந்த சில மாதங்களில்*
*உங்களுக்குள் நிகழ்ந்த*
*மாற்றங்கள்தான் இவை."*

☺

## மழையாகவே வா மழையே!

**எம். ராம்குமார்**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்
முதலாண்டு 'இ' பிரிவு

*"காற்றான தந்தைக்கும்*
*மேகமான தாய்க்கும் பிறந்த*
*மழைக்குழந்தையே!*

*பிறந்த சில நொடிகளில்*
*பல வண்ணங்களில் வானவில்லாய்*
*தோற்றமளிக்கும் மழையே!*
*அருவியாகக் காட்சியளிக்கிறாய்!*
*நதியாகப் பாய்ந்து செல்கிறாய்!*
*தாவரங்களின் உரமே! உயிரே!*
*வெப்பத்தை நீக்கும் வரமே!*
*வறட்சியைப் போக்கும் பொருளே!*
*இயற்கையின் முத்தே!*
*கடலலைகளின் சொத்தே!*

*மழையே!*
*மனிதன் வாழ நீ வேண்டும்.*
*நீ மழையாகவே வா!*
*வெள்ளமாக அல்ல."*

☺

## நட்பு

**வி. ரம்யா**
இளங்கலை வேதியியல்
முதலாண்டு

*"நம் நட்பு*
*இருவரிக் கவிதை.*
*முதல் வரி நீ.*
*இறுதி வரி நான்.*
*மறந்தும் கூடப் பிரிந்துவிடாதே!*
*நான்*
*பொருளற்றுவிடுவேன்.*

☺

*"பிரிவும் கோபமும் ஒருவரை மறப்பதற்கு அல்ல – அதிகமாக நினைப்பதற்கு."*

**டி.எஸ். வாஹினி**
இளங்கலை கணிதம் முதலாண்டு
'ஆ' பிரிவு

## என் அன்னை

**ரா. மைதிலி**
இளங்கலை கணினி அறிவியல்
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"அன்பின் எல்லை என்ற*
*கட்டுப்பாடு இல்லை.*

*ஆனால் அன்பிற்கு*
*இல்லை எல்லை.*

*இன்பம் என்ற வாசலின்*
*பூட்டைத் திறக்கும் சாவி அன்னை.*

*ஈர்ப்பு என்னும் காந்தம்*
*உன்னிடத்தில்*
*இரும்பு இதயமோ என்னிடத்தில்.*

*உயிர் என்னும் ஆத்மா*
*உன்னிடத்தில்*
*உடலென்னும் கவசம் என்னிடத்தில்*

*ஊக்கத்தின் தொடக்கம்*
*என்னிடத்தில்*
*ஏற்றமிகு பாதைகள் உன்னிடத்தில்*

*எட்டிப்பிடிக்கும் ஆசைகள்*
*என்னிடத்தில்.*

*ஐம்புலன்களின் தெளிவு*
*உன்னிடத்தில்.*

*ஒவ்வொரு பாதையிலும் முள்*
*அவற்றை மலர்களாய்*
*மாற்றியவள் நீ.*

*ஓயாது உறங்காது உற்சாகமூட்டி*
*அன்புடன் வளர்த்தாய் என்னை.*

*ஔவை உலகுக்கு அறத்தாய்.*
*நீ எனக்கோ*
*ஔவையாய் அமைந்த*
*பெற்ற தாய்.*

☺

## குறள் முத்துக்கள்

திருக்குறளில் உள்ள ஆகச் சிறந்த கருத்துகளைத் தொகுத்துக் குறட்பா அடிகளில் கொடுத்துள்ளேன்.

**'செயற்கரிய செய்வார் பெரியர்' (26)**
**'அறத்தான் வருவதே இன்பம்' (39)**
**'நன்றி மறப்பது நன்றன்று' (108)**
**'அடக்கம் அமரருள் உய்க்கும்' (121)**
**'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' (125)**
**'யாகாவார் ஆயினும் நாகாக்க' (127)**
**'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' (136)**
**'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' (138)**
**'வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை' (221)**
**'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்' (241)**

(தொடரும்)

**தொகுப்பு: கா. நித்யா**
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

☺

*சங்கச் சாரல் - 07*

# எதற்கு இந்த ஏக்கம்?

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றார் வள்ளுவர். இதற்கு எண்ணங்கள் உயர்வானதாக இருக்க வேண்டுமேயன்றி இழிவானதாக இருக்கக் கூடாது என்னும் பொருள் கொள்ளவேண்டும். சிலர் தம்மால் முடியாத ஒன்றை நினைத்துக்கொண்டு அதற்காக ஏக்கப்படுவதைக் காண்கின்றோம். கேட்டால் உள்ளுவததெல்லாம் உயர்வுள்ளல் என்று கூறுகின்றனர்.

'முடியாது' என்று ஏதேனும் உண்டா? முயன்றால் எதுவும் முடியுமே. அப்படியிருக்க "முடியாத ஒன்றிற்காக..." என்று சிந்திப்பது முறையாகுமா? முயற்சியின்றி ஒன்றை மனத்தில் மட்டும் சிந்தித்துக் கொண்டு ஏக்கப்படும் ஒருவரால் எதுவும் முடியாது. ஏக்கத்தைக் கைவிட்டு முயற்சி செய்யும் ஒருவருக்கு எதுவும் முடியும். அதே வேளையில் அவனிடம் ஏக்கம் என்பதும் இருக்கப் போவதில்லை.

முயற்சியின்றித் தவிக்கும் தலைவனை அவரது தோழன் முயற்சிக்கத் தூண்டும் அழகிய சிந்தனையினைக் குறுந்தொகையில் காணமுடிகின்றது.

நல்ல விருந்து உணவை உட்கொண்டால் உடல் புத்துயிர்வுபெறும். ஊக்கம் கிடைக்கும். உணவின்றித் தவித்துக் கொண்டிருந்தால் உடல் வாடிப்போகும். உள்ளங்கூடத் தளர்ந்துபோகும். இதனால்தான் பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்று கூறுகின்றனர். அதாவது எதைத் தாங்கிக்கொண்டாலும் ஒருவரால் பசியைத் தாங்கிக் கொள்ள முடியாது. பசியின் கொடுமையைப் போக்கிக் கொள்வதற்காக ஒருவர் எதையும் இழப்பார் என்பதையே 'பசிவந்திட்ட பத்தும் பறந்துபோகும்' என்று கூறினர்.

ஈழக் கோழிகள் இரையின் மையால் ஒன்றையொன்று கொத்தித்தின்ற அவலத்தையும் கடந்த மாத செய்தித்தாள்களில் காணமுடிந்தது. இது பசியின் கொடுமை எத்தன்மையது என்பதனையும் அப்பசியைப் போக்கிக் கொள்ள எல்லா உயிர்களும் எவ்வாறு

போராடுகின்றன என்பதையும் வெளிக்காட்டுகின்றது.

ஒருவரின் எண்ணத்தில் தோன்றிய உயர்ந்த கனவு அவரது பசியாக இருக்கவேண்டும். அந்தக் கனவுப் பசியைப் போக்கிக்கொள்ள அவர் முயல வேண்டுமேயன்றி ஏக்கப்பட்டு, ஏக்கப்பட்டு உடல் வாடிப்போகக் கூடாது. ஏக்கப்படுவதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. அதனால் தீமைகளே வந்துசேரும்.

மனிதர்களின் எண்ணங்களும் ஆடைகளும் பலவாக உள்ளன. அவரவர் தகுதிகளுக்கு ஏற்ப அவரவர் எண்ணங்கள் தோன்றுகின்றன. சந்தர்ப்பம், சூழல் முதலியவற்றாலும் ஒருவருக்கு எண்ணங்கள் அமைகின்றன.

இளம் வயதுடைய தலைவன் தன் மனத்தை ஒரு பெண்ணிடம் கொடுத்துவிடுகின்றான். அதனால் துன்பம் அடைகின்றான். அத்துன்பத்தால் உடல் வாடிப் போகின்றான். தலைவனின் இந்த நிலையை அவனது தோழன் காண்கின்றான். அவனுக்குக் கோபம் கோபமாக வருகின்றது. தலைவன் ஏதோ பேயடித்தவன் போல் காணப்படுவதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தலைவனைக் கடிந்து கூறுகின்றான். பசு, மேட்டு நிலத்தில் வளர்ந்திருக்கும் இளம்புல்லைத் தின்பதற்கு ஆசைப்பட்டால் அந்த மேட்டு நிலத்தில் ஏற வேண்டும். அந்தப் புல்லை இனிதே கடித்து உண்ண வேண்டும். அதனை விடுத்துவிட்டு பள்ளத்தில் இருந்து மேலே ஏறிச்செல்லமுடியாத வயதான பசு அந்தப்புல்லுக்காக எண்ணி வருந்துவதில் பயன் என்ன உள்ளது?

ஆசைப்பட்ட பொருள் உயர்வான இடத்தில் இருக்கிறது என்றால் அந்த உயரத்தை அடையும் தகுதிகள் இருக்கிறதா? அதற்கான சூழல்கள் உண்டா? என்பதையெல்லாம் பார்த்து ஆசைப்பட வேண்டும். அத்தகுதிகள் நமக்கும் உண்டு என்றால் பிறகு எதற்கு ஏக்கம்? முயற்சியில் இறங்கவேண்டியது தானே!

இதனைத் தோழன் தலைவனுக்குக், “காமம், காமம் என்று சொல்லிக்கொண்டு அதனால் துன்பம் அடைந்து உடல் மெலிவது எதற்காக? காமம் என்ன பேயா? உன்னைத் துன்பப்படுத்துவதற்கு? காதலை அனுபவிக்கும் இளமை

இல்லாதவனுக்கு வேண்டுமானால் அது துன்பத்தைக் கொடுக்கலாம். நீயே பெரிய தோளினை உடையவன். இளமையுடையவன். நீ அந்தக் காமத்தால் துன்பம் அடையத் தேவையில்லை. அதற்கான முயற்சிகளில் இறங்கு. எதற்கு இந்த ஏக்க நிலை? நீ என்ன வயதுமுதிர்ந்த பசுவா? மேட்டுநிலத்தில் உள்ள புல்லை உண்ண முடியாது துன்பமடைவதற்கு? முயற்சியைக் கைக்கொள். வெற்றி பெற்றிடு" என்று கூறி அவனை ஊக்கப்படுத்துகின்றான்.

இதனை மிளைப்பெருங்கந்தன் எனும் புலவர்,

***"காமம் காமம் என்ப; காமம்***
***அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்***
***முதைச் சுவற் கலித்த முற்றா இளம்புல்***
***மூதா தைவந்தாங்கு***
***விருந்தே காமம் - பெருந்தோளோயே"***

(குறுந்தொகை - 204)

என்று பாடியுள்ளார். இப்பாடலில் இடம்பெறும் 'காமம்' என்ற சொல் தலைவன் கொண்டுள்ள காதலைக் குறிக்கின்றது. பிற்காலத்தில் இச்சொல் முறையற்ற பாற்கவர்ச்சியைக் குறிப்பதாயிற்று.

***சாரலில் மீண்டும் நனைவோம்...***

***முனைவர் த. கண்ணன்***
தமிழ் விரிவுரையாளர்

☺

# தயங்காதே!

**டி. காயத்ரி**
இளங்கலை துகிலியல் மற்றும்
ஆடைவடிவமைப்புத்துறை
மூன்றாமாண்டு

*"முடியும் உன்னால்*
*விடியும் தன்னால்*
*என்பதை ஏற்றுத் துணிந்துவிடு.*

*பகை மடிந்துபோகத்*
*துடித்தெழுந்தே*
*சோம்பலைச் செருப்பாய்*
*அணிந்துவிடு!*

*ஏதிரிகள் வரிசை*
*எத்தனை இருப்பினும்*
*இமைக்கும் பொழுதில்*
*வென்றுவிடு.*

*பூ உதிர்ந்தாலும் எருவாகும்.*
*புன்னகைபூத்து நின்றுவிடு!*

*உனக்குள் இருக்கும் திறனை*
*எல்லாம் உலகம் வியக்கக்*
*காட்டிவிடு.*

*மலர்ந்தால் மணக்கும்*
*வாசனையைப்*
*பூட்டிட முடியாது*
*என்பதை நாட்டிவிடு!*

*திறமை அனைத்தும்*
*மறைத்து வைத்தே*
*தேய்ந்துபோக*
*விரும்பாதே!*
*உன் திறமைக்கேற்ற பயனைப்*
*பெற்றுத் திசைகள் வென்றிட*
*தயங்காதே!*

*உண்மை உழைப்பு ஊக்கம் உறுதி*
*உன்றன் நெஞ்சில்*
*இருக்கட்டும்.*
*நீ எண்ணும் எண்ணம் எல்லாம்*
*நடக்கும் என்பதை நெஞ்சம்*
*ஏற்கட்டும்.*

*துருப்பிடித்து அழிவதை விடவும்*
*தேய்ந்து அழிவது*
*நன்றாகும் - அட*
*வருவதை எண்ணிக் கொண்டிருந்தால்*
*வாழ்க்கை இங்கே சுமையாகும்.*

*தடையாய் இருக்கும் சுவரை இடித்து*
*துணிவாய் நிமிர்ந்து*
*வாழ்ந்துவிடு.*
*உன் விடையில் உறவுப் பாலம்*
*அமைக்கும் வழியைக் கொஞ்சம்*
*அமைத்துவிடு.”*

☺

## ஆசிரியர்!

**டி. வித்யா**
இளங்கலை கணிதம்
முதலாண்டு ‘ஆ’ பிரிவு

*“மழலையாய்ப் பிறந்து*
*அறிவால் வளர்ந்து*
*தந்தையாய் வழிநடத்தி*
*தாயாய் அன்பு காட்டி*
*நண்பனாய் உதவி*
*வாழ்க்கையில் வெற்றி*
*பெறுவதற்கு வழிகாட்டியவர்*
*ஆசிரியர்”*

## தாயின் குரல்

**பி. பிரியதர்ஷினி**
இளங்கலை கணிதம்
முதலாண்டு ‘ஆ’ பிரிவு

*“பட்டினிக் கிடந்து*
*பள்ளியில் சேர்த்தேன்.*

*கல், மண் சுமந்து*
*கல்லூரியில் சேர்த்தேன்.*

*வெயிலில் வெந்து*
*வேலையில் சேர்த்தேன்.*

*நீயோ!*
*என்னை எளிதாய் சேர்த்துவிட்டாய்*
*முதியோர் இல்லத்தில்”*

☺

சரித்திரக் கட்டுரை – 09

# ஆண்டாள் கோவில்

இறைவன் ஸ்ரீமன் நாராயணன் வராக அவதாரத்தின்போது காலநேமி என்று ஓர் அசுரனை வதம் செய்தபின் அவரது துணைவியர் ஸ்ரீ மகாலட்சுமி மற்றும் பூமாதேவி தேவியருடன் ஓர் ஆலமரத்தின் கீழ் ஓய்வு எடுத்த இடம் செண்பகதோப்பு எனும் அழகிய வனம் ஆகும்.

இப்பகுதி மல்லி என்ற அரசியின் ஆட்சியில் இருந்தது. வில்லி மற்றும் கண்டன் எனும் அரச குமாரர்கள் இவ்வனத்தில் வேட்டையாடும்போது கண்டனைப் புலி கொன்றுவிட, வில்லி கண்டனைத் தேடி களைத்து உறங்கியபோது இறைவன் கனவில் தோன்றி நடந்ததைக் கூறி அங்குத் தனக்கு ஆலயம் எழுப்புமாறு பணித்தார். இறைவன் ஆணைப்படி காட்டைத் திருத்தி கோயில் எழுப்பி அழகிய நகரமைத்தான். இதனாலே வில்லிபுத்தூர் எனும் பெயர் பெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர் பெயர் காரணத் திற்குப் புராணங்கள் உண்டு. சாபத்திற்கு ஆளான வில்லி, கந்தன் என்ற இரு முனிவர்கள், வேடர்களாகப் பிறந்து வளர்ந்தனர். ஒருநாள் கந்தனை புலி அடித்துக் கொன்றது. சகோதரரைத் தேடி வில்லி அலைந்தார். அன்றிரவு அவரது கனவில் கந்தன் தோன்றி, தான் இறந்த செய்தியைத் தெரிவித்தார். பின், கந்தன் இறந்த இடத்தை சுத்தம் செய்து ஒரு நகரமாக மாற்றியதுதான், ஸ்ரீவில்லிபுத்தூர் என்கின்றனர்.

ஆண்டாள் பிறந்த ஊராதலால், 'ஸ்ரீ' என்னும் திருநாமத்தோடு ஸ்ரீவில்லி புத்தூர் என்று அழைக் கப்படுகிறது.

மதுரையைக் கைப்பற்றிய கான்சாகிப் என்ற மருதநாயகம், ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்த 'நெற்கட்டுச் செவ்வல்' பாளையக்காரர் பூலித்தேவரை வெல்ல, ஸ்ரீவில்லிபுத்தூரில் முகாமிட்டார்.

1756 மே ஆறாம்நாள் நடந்த போரில் அவரை வெல்ல இயலாமல், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டையைக் கைப்பற்றினார். பின், அதைத் தரைமட்ட மாக்கினார். இப்போது எந்தத் தடயமும் இல்லாத அந்த இடம்


‘கோட்டைத் தலைவாசல்’ என்றழைக்கப்படுகிறது. (அந்த இடம் முழுவதும் இப்போது வீடுகளாகி, கோட்டைத்தலைவாசல் தெருவாக மாறிவிட்டது.

மதுரைக்கும் நெல்லைக்கும் நடுவில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டை இருந்ததால், ஆங்கிலேயர் ஆட்சியில் ‘நடுமண்டலம்’ என்று அழைக் கப்பட்டது. ஆங்கிலேயரின் ராணுவ தளவாடமாகவும் இருந்தது.

ஆண்டாள் கோயில் கி.பி. 788இல் கட்டப்பட்டது. இங்குள்ள நரசிம்மர் சன்னதி, கல்வெட்டுகளில் ஒன்றான, சோழனின் தலைகொண்ட வீர பாண்டியன் (கி.பி.946-966) கல்வெட்டில், இக்கோயில் ‘ஜலசயநாட்டுக் கிடந்து அருளின பரமசுவாமி கோயில்’ என்றழைக்கப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

சோழமன்னன் முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070-1120) ஆட்சியில் இந்த ஊர், ‘விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலம்’ என்றழைக்கப்பட்டது. பிற்கால பாண்டியர் கல்வெட்டில், இக்கோயில் வடபெருங் கோயில் பள்ளி கொண்டருளிய பெருமாள் கோயிலாக இருந்தது. பின், கி.பி.13ஆம் நூற்றாண்டில் இந்த ஊர், ‘பிரம்மதேய குலசேகர சதுர்வேதி மங்கலம்’ என்ற பெரிய நகரமாகப் பிற்கால பாண்டியர்களால் விரிவுபடுத்தப்பட்டது. கோயிலைச் சுற்றிக் கோட்டைச்சுவர் கட்ட ஸ்ரீவல்லப பாண்டியன் பொற்கிழி வழங்கி உள்ளார்.

புனர்வேலி என்ற ஊரைச் சேர்ந்த சங்கரன்முறி அருளக்கி என்பவர் பாராங்குச புத்தூர் குளத்தைச் சீர்படுத்தி, வடக்குப் பகுதி மதகைப் புதுப்பித்ததாக இங்கு ஆய்வு செய்த தொல்லியல் நிபுணர்கள் கண்டுபிடித்து உள்ளனர். இந்த மதகை இப்போதும் ஸ்ரீவில்லிபுத்தூர் குளத்தில் காணலாம்.



**1940ஆண்டில்**
**ஆண்டாள் கோவில்**

ஆண்டாள் கோயில் பல காலக்கட்டங்களில், பலரால் புதுப்பிக் கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டது. மதுரை யை ஆண்ட திருமலைநாயக்கர், குற்றாலத்திற்குச் செல்லும் வழியில், இங்குத் தங்குவதற்கு ஒரு மாளிகை கட்டினார். பின்னர் அந்தக்கட்டடம் நீதிமன்ற அலுவலகமாக இருந்தது. தற்போது அதை நினைவுச் சின்னமாக்க முயன்று வருகின்றனர்.

இக்கோயிலின் சிறப்பம்சமான 192 அடி உயர ராஜகோபுரம் கி.பி.17ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. தமிழக அரசின் முத்திரை சின்னமாக இருப்பதும் இக்கோபுரம்தான். புராணம், வரலாறுகளைத் தாங்கி நிற்கும் ஸ்ரீவில்லிபுத்தூர், தமிழக அரசின் இலட்சினையின் மையத்தில் இடம்பெற்றுள்ளது.

18 ஆண்டுகள் ஓடாதிருந்த ஆண்டாள் நாச்சியார் பெரியதேர் பல நூற்றாண்டுப் பழமைவாய்ந்தது. கலைநயமிக்கப் பல மரச்சிற்பங்களும் ஒன்பது மரச் சக்கரங்களும் ஒன்பது மேலடுக்குச் சாரம் அலங்கார பதாகைகளும் அதன் உச்சியில் கும்ப கலசம் (ஐந்து பகுதி இணைக்கப்பட்டது) பட்டு கொடியும், ஒன்பது பெரிய வடமும் அமையப்பெற்றது.

தேரோட்ட உற்சவத்தில் சுற்று வட்டார கிராமங்களுக்குக் கோபு ரமும் திருத்தேரும் கம்பீரமாகக் காட்சியளிக்கும். 10 கி.மீ தொலை விலும் தேர் எந்த ரத வீதியில் உள்ளது என அறியலாம். தேரோட்ட உற்சவத்தில் வடம் பிடித்து மக்கள் இழுக்க, நின்ற தேர் நகர மறுத்தால் தேரின் பின் சக்கரங்களில் பெரிய கனமான மரத்தடியால் உந்தித் தள்ளுவர். எண்ணை தடவிய கனமான மர சறுக்குக்கட்டைகளால் தேரை நிறுத்தவும் பக்கவாட்டில் திருப்பவும் செய்வர்.



**18ஆண்டுகள் ஓடாத தேர் (1960)**

காலபோக்கில் மரச்சக்கரங்கள் சேதமுற்றதால் அதிக செலவு கருதி 18 ஆண்டுகள் ஓடாதிருந்தது. மாற்று சிறிய தேர் பயன்பட்டது. மீண்டும் பெரிய தேரைச் சீரமைத்து இழுத்தபோது அலங்கார மேலடுக்கு சாரம், கலசம் சரிந்து கீழே விழுந்து பல உயிர்பலி நேர்ந்தது.


**1974ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்ட தேர்**

முன்பு வலிமைவாய்ந்த மக்கள் இத்தேரை நான்கு ரதவீதிகளில் சுற்றி இழுத்து நிலைக்குவர மூன்று மாதங்கள் ஆகும். பாதுகாப்பு கருதி அலங்கார மேலடுக்கு எண்ணிக் கையைக் குறைத்து, இரும்பு அடிசட்டம், விசைத்தடையுடன் கூடிய நான்கு இரும்பு சக்கரம் அமைத்து தேர் நவீனப்படுத்தப்பட்டது. இக்கால கட்டத்தில் தேரோட்ட விழா ஒரேநாளில் நடந்து முடிந்து விடுகிறது.(தேர் நிலைக்கு வர மூன்று மணி நேரமே).

ஸ்ரீ வில்லிப்புத்தூரில் ஆண்டாள் தன் இடக்கையில் கிளி வைத்திருக்கிறார். ஸ்ரீவில்லிபுத்தூரில் அக் கிளியைத் தத்தை என்று சொல்வார்கள். நாகமல்லிகை இலை, நந்தியாவட்டை இலை, ஏழிலைக் கிழங்கு இலை, வெள்ளரளி, செவ்வரளி போன்ற மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது ஆண்டாளின் கிளி.

**கிளியின் உறுப்புகள்**

மூக்கு - மாதுளம் பூ. உடல் - மரவள்ளிக் கிழங்கின் இலை. இறக்கைகள் - நந்தியாவட்டை இலை, பனை ஓலை. வால் - வெள்ளை அரளி, செவ்வரளி மொட்டுகள். கண் - காக்காய்ப் பொன். கட்டுவதற்கு வாழை நார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்குச் சாத்துவதற்கு வெற்றிலையை ஓலையோடு மடக்கி தினமும் புதிதாகப் பச்சைக்கிளி செய்வார்கள். ஒவ்வொரு நாளும் ஆண்டாளின் கிளியைப் பெற கோயிலில் முன்னதாகச் சொல்லி

வைத்து பக்தர்கள் அதை வாங்கிச் செல்கின்றனர்.

இக் கிளியைப் பூஜையறையில் வைத்துக் கொண்டால் நன்மைகள் பெருகுவதாக நம்பிக்கை. பக்தர்கள் தங்கள் வேண்டுதலை ஆண்டாளிடம் கூறும்போது அதைக் கேட்கும் கிளி, திரும்பத் திரும்ப அவரிடம் நினைவுறுத்துவதாக ஐதிகம். வியாசரின் மகனாகிய சுகப்பிரம்ம மகரிஷியே ஆண்டாளின் கையில் கிளியாக அமர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

*வரலாற்றுத் தகவல்களை மாணாக்கர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு இப்பகுதி தமிழ்த்துறையால் வெளியிடப்படுகின்றது.*

**தகவல், படங்கள் நன்றி: *http://ta.wikipedia.org***

☺

## அம்மா

**எம். தீபிகா**
இளங்கலை கணிதம் முதலாண்டு
'ஆ' பிரிவு

*"கருவில் எனக்கு இரத்தத்தைப்*
*பாலாகத் தந்தாய்.*
*வளரும்போது வியர்வை சிந்திப்*
*பசியாற்றினாய்.*
*படிக்கும் பருவத்தில் தாலியை*
*விற்றுப் பணம்கட்டினாய். இன்று*
*நான் தாலிகட்டிக்கொண்டபின்*
*உன்னை மறப்பேனா!"*

☺

## நாட்டுப்பண்

விழாவின் நிறைவாக நாட்டுப் பண் (தேசிய கீதம்) பாடுவது வழக்கம். அதன் பொருள் மாறுபடாமல் அதனைத் தமிழ்மொழியில் பாடவும் இயலும்.

***"உயர்குல உயரரசாய நீ வெல்கவே!***
***இந்தியச் செல்வமிகு நாடே!***
***பஞ்சாப் சிந்து குசராத் மராட்டியம்***
***திராவிட ஒரிச வங்காளம்***
***விந்திய இமய யமுனை கங்கை***
***விரிகடல் அலைஒலி சேர்வாய்***
***அவை உன்னை வணங்குவதாமே!***
***அவை உமதருள் வேண்டுவதாமே!***
***தாயே! உன்னைப் புகழ்ந்தனவே***
***உயர்குலநல்வினை தாயே நீ வெல்கவே!***
***இந்தியச் செல்வமிகு நாடே!***
***வெல்கவே! வெல்கவே! வெல்கவே!***
***வெல்க வெல்க வெல்க வெல்கவே!"***

*தொகுப்பும் செம்மையாக்கமும்:*
**பா. சுஜிதா,**
**ப. விஜய சந்திரிகா, மு. ராஜலட்சுமி**
இளங்கலை வணிகவியல் (கணினிப் பயன்பாடு) முதலாண்டு 'ஆ' பிரிவு

☺

அஞ்சலி:

## எழுத்தாளர் ரா.கி.ர.



வரலாற்று நாவல்கள், மொழி பெயர்ப்புகள், துப்பறியும் கதைகள், கட்டுரைகள் எனப் பல்வேறு படைப்புகளைப் படைத்த ரா.கி.ர. கடந்த மாதம் இறுதியில் காலமானார்.


திரு. ரங்கராஜன் 1927இல் கும்பகோணத்தில் பிறந்தார். இவரின் தந்தை ஆர்.வி. கிருஷ்ணமாசாரி சமஸ்கிருதப் பண்டிதர் ஆவார். ரங்கராஜனின் பத்திரிகை அனுபவம் சக்தி இதழில் தொடங்கிக் காலச்சக்கரம், கல்கண்டு எனத் தொடர்ந்தது.

இவர் எழுதிய வரலாற்றுப் புதினமாக 'நான் கிருஷ்ணதேவராயன்' புகழ்பெற்றதாகும்.

'மகாநதி' என்ற திரைப்படத்திற்கு வசனம் எழுதியுள்ளார்.

விகடன் இதழ்களில் எழுதினார். அவை விகடன் பிரசுரத்தின் வழியாகப் புத்தகமாக வெளி வந்துள்ளன. சில ஆண்டுகள் 'அண்ணாநகர் டைம்ஸ்' என்ற உள்ளூர் இதழில் நாட்டு நடப்புகளை எழுதிவந்தார்.






இவர் 1947 முதல் ஏறத்தாழ 42 ஆண்டுகள் குமுதம் இதழ்களில் எழுதிவந்தார். குமுதம் இதழில் 'அரசு பதில்கள்' என்ற தலைப்பில் எழுதிய மூவருள் ஒருவர் இவர். (அரசு – என்பதில் நடு எழுத்து இவரைக் குறிக்கும். அ-அண்ணா மலை அவர்களையும் சு- சுந்தரேசன் அவர்களையும் குறிக்கும்)

சூர்யா, ஹம்சா, துரைசாமி, கிருஷ்ணகுமார், மாலதி, வினோத் போன்ற பல புனைப்பெயர்களில் பல்வேறு நடைகளில் எழுதிவந்தார்.

☺

# பாடம்

**ஜி. ஆனந்தகுமார்**
இளங்கலை துகிலியல் மற்றும்
ஆடைவடிவமைப்புத்துறை
முதலாண்டு

காட்டில் நடக்கும் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தது ஒரு நெருப்புக்கோழி. அந்தப்போட்டியை ஏற்பாடு செய்த யானை அன்று இரவு போட்டியாளர்களுக்கு விருந்தளித்தது. அதில் கலந்துகொண்ட நெருப்புக் கோழியை மற்ற விலங்குகள் ஏளனமாகப் பார்த்தன.

‘நெருப்புக்கோழியே நீ எங்களோடு ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டு வெற்றிபெறமுடியுமா? இப்படி தேவை இல்லாமல் தோற்று அவமானப் படலாமா? உன்னைப்பார்த்தால் எங்களுக்குப் பாவமாக இருக்கிறது. இதுக்குப் பெரிய பி.டி.உஷா என்ற நினைப்போ என்னவோ?’ என்று கிண்டல் செய்தது மான். அதைக்கேட்ட பிற விலங்குகள் நெருப்புக்கோழியைப் பார்த்துச் சிரித்தன.

நெருப்புக்கோழி கோபப்படாமல் ‘அன்பர்களே நான் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு கலந்துகொள்ளவில்லை. உங்களைப் போல் திறமைசாலிகளோடு கலந்து கொண்டு தோற்பதில் எனக்குத்தான் பெருமை’ என்றது தன்னடக் கத்தோடு.

‘எப்படி?’ என்று அனைத்தும் இணைந்து வினவின.

‘நான் உங்களைப்போல் வலிமை யுடையவர்களோடு கலந்து கொண்டேன் என்று பிறரிடம் கூறிப் பெருமைகொள்வேன்.’ என்றது. உடனே அவை அனைத்தும் அமைதிகாத்தன.

மறுநாள் ஓட்டப்பந்தைய மைதானத்தில் அனைத்து விலங்குகளும் ஓடுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தன. நடுவராக இருந்த கரடி, ‘வீரர்களே! இங்கிருந்நுது ஏரியைச் சுற்றிக்கொண்டு மறுபடி இங்கு யார் முதலில் வருகிறார்களோ அவருக்கு ஒரு சவரன் தங்கப்பதக்கம் வழங்கப்படும்’ என்று கூறிப் போட்டியைத் தொடங்கிவைத்தது.

மான், சிங்கம் இரண்டும் முன்னால் ஓட நெருப்புக்கோழி மூன்றாவதாக வந்துகொண்டிருந்தது. முக்கால் பாகம் ஏரியைக் கடந்ததும்

ஓட முடியாமல் மெதுவாக ஓடியது. நெருப்புக்கோழி வேகத்தை அதிகரித்து முதலில் வந்தது.

கரடி நெருப்புக்கோழிக்குப் பதக்கம் அணிவித்தது. பின்னர் 'நண்பர்களே! நெருப்புக் கோழியை மட்டமாக நினைத்தீர்கள். அதுவோ மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் ஓடக்கூடியது. அது தன் வலிமையைப் பெருமைப்படுத்தி என்றும் கூறிய தேயில்லை. குறைகுடம் கூத்தாடும். நிறைகுடம் கூத்தாடாது' என்று கூறியது.

☺

# ஒலிம்பிக்கில் பெற்றதும் கற்றதும்

**கீர்த்தனா**
இளங்கலை வேதியியல்
இரண்டாமாண்டு

கடந்தமாதம் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 204 நாடுகள் பங்கேற்றன. 10,824 வீரர்கள் கலந்துகொண்டனர்.

இந்தியாவிலிருந்து 81 வீரர்கள் சென்றனர். அதில் ஆறு வீரர்கள் பதக்கம்பெற்றனர். இந்திய மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டால் நாம் அனுப்பிய வீரர்களும் பெற்ற பதக்கங்களும் மிகச் சொற்ப அளவேதான். இதற்கான அடிப் படைக்குறைகள்:

- *அதிக உழைப்பில்லை*
- *தேவையான பயிற்சியில்லை*
- *கூடிய விழிப்புணர்வில்லை*
- *தன்னம்பிக்கை குறைவு*
- *சரியான ஊக்கமின்மை*
- *நாட்டுப்பற்றுக் குறைவு*
- *தெளிவான இலக்கில்லை*
- *தொலைநோக்குப் பார்வையில்லை*
- *ஒலிம்பிக்கில் கலந்துகொள்வது என்பது ஒரு விழாவில் கலந்துகொள்வதைப் போலக் கருதுவது.*

ஒலிம்பிக் ஒரு திருவிழா அல்ல. அது ஒரு கடுமையான தேர்வு. மனிதனின் ஆகப்பெரிய சக்தி அளவீட்டைப் பதிவுசெய்யும் களம். வென்றால் நமக்கும் நாட்டுக்கும் பெருமை.

☺

# குழந்தைத் தொழிலாளர்

**கே. சரண்யா**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்
முதலாண்டு 'இ' பிரிவு

***முன்னுரை:***

'இளமையில் கல்' என்கிறது முதுமொழி. ஆனால், பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில் பாலகர்கள் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். இதனால் அவர்கள் எழுத்தறிவைப் பெறத் தவறுவதோடு வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெறவும் இயலாமல் போகிறது. பாலகர்கள் வேலைக்கு அனுப்புவதைத் தடை செய்ய ஏற்படுத்தப்பட்டதே குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முறையாகும்.

***வறுமையே காரணம்:***

இளம் வயதில் குழந்தைகளுக்கு வாழ்க்கைப் பற்றிய விழிப்புணர்வு இருப்பதில்லை. எதைச் செய்ய வேண்டும் எதைச்செய்யக் கூடாது என்பது தெரியாது. எனவே அவர்களை வழி நடத்தும் பொறுப்பு பெற்றோர்க்கே உரியது. சில தந்தையர்கள் மதுவுக்கு அடிமையாகிப் பொருளாதாரத் தேவைக்காக குழந்தைகளைப் பணிக்கு அனுப்பும் கட்டாயத்திற்கு ஆளா கின்றனர்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பணிக்குச் செல்ல வற்புறுத்தக் காரணம் வறுமையே ஆகும். சில பெற்றோர் பணத்தின் மீதான ஆசையால் தம் குழந்தைகளைப் பணிக்கு அனுப்புகிறார்கள். தற்போது பணம் கிடைக்கிறது என்று அவ்வாறு செய்வதால் குழந்தைகளின் எதிர்காலம் வீணாகிறது என்பதை அவர்கள் நினைத்தும் பார்ப் பதில்லை.

முன்னாள் தமிழக முதல்வர் அமரர் காமராசர் அவர்கள் ஏழ்மையினால் குழந்தைகளின் கல்வி தடைப்படக்கூடாது என்று உயர்ந்த நோக்கிலேயே பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஆனாலும் இன்றளவும் குழந்தைகள் பட்டாசுத் தொழிற்சாலை, பீடி தொழிற்சாலை, பழைய காகிதம் சேகரித்தல் போன்ற பணிக்குச்செல்ல வற்புறுத்தப் படுகின்றனர்.

***தீமைகள்:***

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழிக்கு ஏற்பக் குழந்தைகளுக்கு இளம் வயதில் கல்வி கற்பிக்க வேண்டியது பெரியவர்களின் கடமை.

அவ்வாறு செய்யத் தவறினால் அது அவர்கள் எதிர்காலத்தைப் பாதிக்கும். குழந்தைகளுக்கு இயல்பாகவே படிப்பிலும் விளையாட்டிலும் ஆர்வம் இருக்கிறது. அதைவிட்டு விட்டு அவர்களைப் பணிக்கு அனுப்புவதால் அவர்கள் பல விபத்துக்களுக்குள்ளாக நேரிடுகின்றது.

***பெற்றோர் கடமை:***

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் முதன்மைப் பொறுப்பு பெற்றோருக்கே உரியது. வறுமையைக் காரணம் காட்டியோ பணத்தேவையைக் காரணம் காட்டியோ குழந்தைகளைப் பணிக்கு அனுப்புதல் ஒருபோதும் ஏற்புடையது அல்ல. அன்றாடத் தேவைகளைக் குறைத்தேனும் அவர்களைக் கல்வி கற்க அனுப்ப வேண்டும். இதற்காக அரசு அளித்துவரும் நலத்திட்டங்களை அறிந்து அதிகாரிகளை அணுகித் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

***முடிவுரை:***

ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளிடம் இருக்கிறது என்பதனைப் பெற்றோர் உணர்ந்து குழந்தைக் கல்விக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

☺

## மாமல்லபுரம்

மாமல்லபுரம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு பேரூராட்சி ஆகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ நாட்டின் முக்கிய துறைமுகமாக விளங்கிய நகரமாகும். இந்நகரம் மகாபலிபுரம் என்றும் வழங்கப்படுகிறது.

மாமல்லபுரத்தில் உள்ள கட்டடங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: குடைவரைக் கோயில்கள் அல்லது மண்டபங்கள், ஒற்றைக்கல் கோயில்கள் அல்லது இரதங்கள் மற்றும் கட்டுமானக் கோயில்கள். இவைதவிர, புடைப்புச் சிற்பத் தொகுதிகள் கோயில்களின் வெளிப் புறத்திலும் உள்ளும் காணப்படுகின்றன.

மாமல்லபுரத்தின் சிற்பங்கள் மிக நளினமாகவும் இயல்பானவையாகவும் இருப்பதாலும் கடற்கரைக் கோயில்கள், இரதங்கள், புடைப்புச் சிற்பத் தொகுதிகள் போன்ற சிறப்பு வாய்ந்தன பல இருப்பதாலும், மாமல்லபுர நினைவுச் சின்னங்களை ‘உலகப் பண்பாட்டுச் சின்னம்’

என்று 1984இல் யுனெஸ்கோ அறிவித்தது.

பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக்குப் பிறகே மாமல்லபுரச் சிற்பங்கள் உருவாக்கப் பட்டிருக்கவேண்டும். இங்குள்ள பஞ்சபாண்டவ இரதங்களை அவருடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் என்னும் மாமல்லன் கட்டியதாகவும், வேறு பல கட்டுமானங்களை அவருடைய பேரன் பரமேஸ்வரவர்மனும், அவருடைய மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் ராஜசிம்மனும் கட்டியதாகவும் பல அறிஞர்கள் கூறுகிறார்கள். முதன்மையாகக் கணேச இரதம், கடற்கரைக் கோயில்கள் ஆகியவை ராஜசிம்மனால் கட்டப்பட்டுள்ளதாகவே அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் ஓர் அறிஞர், இங்குள்ள அனைத்துக் கட்டுமானங்களுமே இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் ராஜசிம்மனாலேயே கட்டப்பட்டவை என்கிறார்.

பெரும் பாறை ஒன்றின் முகப்பை மட்டும் பட்டையாகச் செதுக்கி, அதன்பின் உள்நோக்கிக் குடைந்த வகையில் உருவாக்கப்பட்டவையே இந்த வகைக் கோயில்கள். இவற்றின் பின்புறச் சுவரில் கருவறைகளும் அதற்குமுன்பாக அர்தமண்டபம், முகமண்டபம் ஆகிய முன்னறைகளும் இருக்கும். கட்டுமானத்தைத் தாங்கும் வகையில் தூண்கள் செதுக்கப் பட்டிருக்கும். இவ்வகைக் கோயில்களில் ஒரு கருவறை அல்லது மூன்று கருவறை அல்லது ஐந்து கருவறைகள்கூட இருக்கலாம். எல்லாக் கோயில்களிலும் கருவறைக்கு முன் அர்தமண்டபம் இருக்கும். சிலவற்றில் மட்டுமே அர்த மண்டபத்துக்கும் கருவறைக்கும் இடைப்பட்ட இடமான முகமண்டபம் இருக்கும்.

கருவறைகள் சிவன், திருமால், பிரமன், துர்க்கை, சுப்ரமணியன் ஆகிய தெய்வங்களுக்கானவை. இந்த தெய்வங்கள் சில கருவறைகளில் சிலைகளாகப் பின் சுவரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் எல்லாக் கருவறைகளிலும் அப்படி இல்லை. மரத்தில் செதுக்கப்பட்டோ அல்லது துணியில் வரையப்பட்டு மரச்சட்டத்தில் பொருத்தப்பட்டோ உள்ளே வைக்கப் பட்டிருக்கலாம் என்கிறார்கள் அறிஞர்கள். சிவனுக்குரிய கருவறைகளில் லிங்கத்தை நட்டு வைப்பதற்கான குழி காணப் படுகிறது. சில கருவறைகளில்

லிங்கமும் உள்ளது. ஒவ்வொரு கருவறைக்கும் வெளியே இரு துவாரபாலகர்கள் (வாயில்காப்போர்) சிற்பங்களைக் காணலாம். பெண் தெய்வமாக (துர்க்கை) இருக்கும்போது வாயில்காப்போரும் பெண்களாக இருப்பார்கள்.

மண்டபங்கள் பின்வருமாறு:

- தர்மராச மண்டபம்
- மகிஷாசுரமர்த்தினி மண்டபம்
- வராக மண்டபம்
- ஆதிவராக மண்டபம்
- ராமானுச மண்டபம்
- திரிமூர்த்தி மண்டபம்
- கோடிக்கல் மண்டபம்
- கோனேரி மண்டபம்
- அதிரணசண்ட மண்டபம்

இயற்கையான பாறையை மேலிருந்து கீழ்நோக்கிச் செதுக்கித் தோற்றுவிக்கப்பட்ட ஒற்றைக்கல் கோயில், தேர் போலக் காட்சியளிப்பதால் இரதம் என்று அழைக்கப்படுகிறது. இவைதான் பிற்காலக் கோயில்களுக்கு முன் மாதிரிகள். இவற்றின் மேல்பகுதி விமானம் என்று அழைக்கப்படும். மாமல்லபுரச் சிற்பிகள் பல்வேறு விதமான விமானங்களை சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். ஒவ்வொரு இரதக் கோயிலிலுக்கும் ஒரு கருவறை உண்டு. கருவறைக்கு இருபுறமும் வாயில்காப்போரும் உண்டு.

***இரதங்கள்:***

முதலாம் நரசிம்மவர்மன் என்னும் மாமல்லனின் (கி.பி. 630 - 668) அரிய படைப்பான பஞ்சபாண்டவ இரதங்கள் என்று அழைக்கப்படும் ஐந்து ஒற்றைக்கல் கோயில்கள் மற்றும் சில விலங்குச் சிற்பங்கள் அடங்கிய ஐந்து இரதங்கள் தொகுதி தெற்கிலிருந்து வடக்காகச் சரிந்த சிறு குன்றிலிருந்து செதுக்கப்பட்டதாகும்.

இந்த ஐந்து இரதங்களும் பஞ்சபாண்டவர்கள் பெயரைப் பெற்றிருந்தாலும் அவை மகா பாரதத்துடன் தொடர்புடையவை அல்ல. மூன்று அடுக்குகளுடன் எட்டுபட்டை சிகரத்தை (திராவிட விமானம்) உடைய தர்மராச இரதம் மற்றும் அருச்சுன இரதம், சாலை (கூண்டு வண்டி) வடிவிலான சிகரத்தை உடைய பீம இரதம், சதுரமான குடிசை போன்ற சிகரத்தை உடைய திரௌபதி இரதம் மற்றும் கஜபிருஷ்டம் (யானையின் பின்பக்கம்) போன்ற சிகரத்தை உடைய சகாதேவ இரதம் ஆகிய இரதங்கள் கோயில் மாதிரிகளுக்காகத் தோற்று விக்கப்பட்டவையே என்பதை

அவற்றின் ஸ்தூபிகள் பாறையிலிருந்து பிரிக்கப் பட்டு சிகரத்தின் மீது பொருத்தப்படாமல் இருப்பதிலிருந்து அறியலாம்.

மாமல்லபுரத்தின் ரதங்களிலேயே மிகவும் பெரியதும், மிகவும் அழகு வாய்ந்ததும் தர்மராச இரதம் ஆகும். இந்த ரதத்தில் மூன்று தளங்கள் உள்ளன. மேலே உள்ள இரண்டு தளங்களும் முழுவதுமாக முடிக்கப் பட்டுள்ளன. தரைத்தளம் முழுவதுமாகச் செதுக்கப்படவில்லை. மேல் இரு தளங்களிலும் ஒவ்வொரு கருவறை உள்ளது. அதனுள் சோமாஸ்கந்தர் சிற்பங்கள் உள்ளன. அவைதவிர இரு தளங்களின் சுற்றுகளிலும் மிக அற்புதமான சிற்பங்கள் நிரம்பியுள்ளன. ஆனால் மேலே உள்ள தளங்களுக்குச் செல்லப் படிகள் கிடையாது. பொதுமக்களுக்கு இந்த இடத்துக்குச் சென்று பார்க்கும் அனுமதி கிடையாது. இந்த இடத்தை நிர்வகிக்கும் தொல்லியல் துறையின் அனுமதி கிடைத்தால் மட்டுமே இங்கே சென்று பார்க்க முடியும்.

தரைத்தளத்தில் கருவறை குடையப்படவில்லை. ஆனால் அதன் எட்டு மூலைகளிலும் எட்டு அழகான சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை: அர்த்தநாரீஸ்வரர் (சிவனும் பார்வதியும் இணைந்த சிற்பம்), ஹரிஹரன் (சிவனும் திருமாலும் இணைந்த சிற்பம்), சுப்பிரமணியன், பைரவன் வடிவில் சிவன், மேலும் இரு வேறு சிவன், பிரமன் மற்றும் நரசிம்மவர்மப் பல்லவன். நரசிம்மவர்மனின் விருதுப் பெயர்கள் பல்லவ கிரந்த எழுத்துகளில் தரைத்தளம் முழுவதிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் பல்லவர் சிற்பக்கலைத்திறனுக்கு ஓர் ஒப்பற்ற சான்றாகும். முதல் தளத்தில் மொத்தம் 40 சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் 14 சிவன் வடிவங்கள். இதில் கங்காள மூர்த்தி, வீணை ஏந்திய வீணாதார சிவன், தண்டு முனிவருக்கு நடனம் கற்பிக்கும் சிவன், சண்டிகேசனுக்கு அருளும் சிவன், கங்காதரனாக கங்கையைச் சடைமுடியில் ஏந்தும் சிவன், காலாரிமுர்த்தியாக காலன் என்ற அசுரனை வதம் செய்யும் சிவன், ரிஷபாந்திகனாக காளை மாட்டின்மீது சாய்ந்திருக்கும் சிவன், அந்தகாசுரனை வதம் செய்யும் சிவன், நந்திக்கு அருள் வழங்கும் சிவன் போன்றவை அடங்கும். இவை தவிர, சூரியன், சந்திரன், திருமால், பிரமன், சுப்பிரமணியன் ஆகியோர் சிலைகளும் செதுக்கப்

பட்டுள்ளன. பொதுவாக இதுபோன்ற சிற்பங்களே எல்லாக் கோயில்களிலும் காணக்கிடைக்கும் என்றாலும், புதுமையாக இந்தத் தளத்தில் சாதாரணக் கோயில் பணியாளர்களான கையில் ஓலைக்குடலையில் பூவுடன் ஓர் அர்ச்சகர், ஒரு பணியாளர், ஒரு சமையல்காரர், ஓர் ஓதுவார் ஆகியோரும் மிக யதார்த்தமாக வடிக்கப்பட்டுள்ளனர். பூசைக்கு நீர் எடுத்துச் செல்லும் ஒரு பெண்ணின் அழகான சிற்பமும் இந்தத் தளத்தில் வடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் தளத்தில் சூரியன், சந்திரன் ஆகியோரைத் தவிரக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய சிற்பம், தட்சிணாமூர்த்தி வடிவில் உள்ள சிவன் சிற்பமாகும். பல்லவ சிற்பக் கலையின் உன்னதத்துக்கு ஒரு சான்றாக தர்மராச இரதத்தைச் சொல்லலாம்.

ஒரு பெரும் பாறை அல்லது குன்றைக் குடைந்து அல்லது மேலிருந்து செதுக்கிச் செய்யாமல், பல்வேறு கற்களை வெட்டி எடுத்து, ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிச் செய்யப்பட்டவையே கட்டுமானக் கோயில்கள். முகுந்தநாயனார் கோயில் (தரையில் கட்டப்பட்டது) உழக்கெண் ணெய் ஈசுவரர் கோயில் (மலைமீது கட்டப்பட்டது).

பிற்காலத்தில் தென்னிந் தியாவில் கட்டப்பட்ட கோயில்களுக்கு மாதிரியாகவும் முன்னோடியாகவும் மாமல்லபுரத்தின் இந்தக் கோயில் களைக் கருதலாம்.

மாமல்லபுரத்தின் சின்னமாக விளங்கும் கடற்கரைக்கோயில்கள் இரண்டாம் நரசிம்மவர்மன் எனப்படும் ராஜசிம்மனால் கட்டப்பட்டவை. முதலில் இங்கு திருமால் தரையில் படுத்திருக்கும் கோலத்தில் ஒரு கோயில் இருந்திருக்கிறது. அதற்கு இரு பக்கத்திலும் கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியுமாக இரு சிவன் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கிழக்கு நோக்கிய கோயில் உயரமானதாக ஐந்து அடுக்குகள் கொண்ட கோபுரத்தை உடையதாக உள்ளது. மேற்கு நோக்கிய கோயில் சிறியதாக, மூன்று அடுக்குகள் கொண்ட கோபுரத்தைக் கொண்டதாக உள்ளது. இரண்டு கோயில்களின் கருவறையின் பின்புறச் சுவரிலும் சோமாஸ்கந்தர் எனப்படும் சிவன், உமை, குழந்தை வடிவிலான குமரன் என்ற மூன்று தெய்வங்களும் சேர்ந்திருக்கும் சிற்பம் காணப்படுகிறது. இக்கோயிலில் உள்சுற்று ஒன்றும் காணப்படுகிறது. சுவரின் பல இடங்களிலும் பல்வேறு

தெய்வச் சிற்பங்களும் புராண பாத்திரங்களும் காணப்பெறுகின்றன.

இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத புதுமையாக மாமல்லபுரத்தில் உள்ள வெளிப்புறப் புடைப்புச் சிற்பத் தொகுதிகள் விளங்குகின்றன. வெளிப்புறச் சிற்பத் தொகுதிகளாக இங்கு இருப்பவை:

### *கோவர்த்தன சிற்பத் தொகுதி*

அருச்சுனன் தபசு பாறைச் சிற்பத்துக்கு அருகில் கிருஷ்ண மண்டபம் என்ற மண்டபம் உள்ளது. இதற்கு உள்ளாகத்தான் கோவர்த்தன சிற்பத் தொகுதி உள்ளது. பல்லவர் காலத்தில் செதுக்கப்படும்போது இந்தச் சிற்பமும் வெளிப்புறப் புடைப்புச் சிற்பமாகத்தான் இருந்தது. பிற்காலத்தில் விஜயநகர ஆட்சியின் போது இதன்மீது மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இந்திரனுக்கு விழா எடுப்பதை கண்ணன் தடுத்து நிறுத்தியதால் கோபம் கொண்ட இந்திரன் மழையை ஏவ, கோகுலமே மழை, புயல், வெள்ளத்தில் சிக்கிக்கொள்ள, ஆயர்களையும் மாடு கன்றுகளையும் காப்பாற்ற கோவர்த்தனக் குன்றைக் குடையாக எடுத்தான் கண்ணன் என்பது புராணம். இந்தக் கதை தமிழ்ப் பாடல்களில் மிகவும் புகழப்பட்ட ஒன்று. இதனை அப்படியே சிலையாக வடித்துள்ளனர் பல்லவ சிற்பிகள்.

சிற்பத்தின் நடுவே ஒரு கையால் மலையைத் தூக்கியபடி கண்ணன் நிற்க, அருகே பலராமன், பயந்து நடுங்கும் ஓர் ஆயனை அணைத்து ஆறுதல் தருகிறார். இனி பயமில்லை என்பதால், மாடுகள், கன்றுகள், ஆயர்கள், ஆய்ச்சியர் ஆகியோர் தத்தம் வேலையை மகிழ்ச்சியுடன் செய்கின்றனர். ஒருவர் புல்லாங்குழல் வாசிக்கிறான். இருவர் ஜோடியாக நடனம் ஆடுகின்றனர். ஒருவர் மாட்டிட மிருந்து பால் கறக்கிறார். மாடு வாஞ்சையுடன் தன் கன்றை நாவால் நக்குகிறது. ஒரு ஆய்ச்சி தலையில் சுருட்டிய பாய், ஒரு கையில் உறியில் கட்டி வைத்திருக்கும் பால், தயிர் சட்டிகளுடன் நிற்கிறாள். ஒருவர் தோளில் ஒரு சிறு குழந்தை உட்கார்ந்துள்ளது. சற்றே பெரிய குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர் கையில் பிடித்துள்ளனர். எங்குத் திரும்பினாலும் மாடுகள் நம்மைப் பார்க்கின்றன. முல்லை நிலக் காட்சியை அப்படியே அற்புதமாகச் செதுக்கியுள்ளனர் சிற்பிகள்.

### *அனந்தசயன சிற்பத் தொகுதி*

கலங்கரை விளக்கத்துக்குச் செல்லும் வழியில் குன்றின்மீது மகிஷாசுரமர்த்தினி மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் சுவர்களில் இரண்டு அற்புதமான சிற்பங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான், திருமால் பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டிருக்க, மது, கைடபன் என்று இரு அரக்கர்கள் அவரைத் தாக்க வரும் காட்சி.

### *மகிஷாசுரமர்த்தினி சிற்பத் தொகுதி*

மகிஷாசுரமர்த்தினி மண்டபத்தில் இருக்கும் மிக அழகான சிற்பத்தொகுதி, துர்க்கை (சக்தி) சிங்க வாகனத்தில் ஏறி, மகிஷன் என்னும் எருமைத்தலை கொண்ட அரக்கனை வதம் செய்யும் காட்சி. மகிஷாசுரமர்த்தினி என்று அழைக்கப்படும் சக்தி, பத்து கைகளுடன் இருக்கிறாள்.

ஆயுதங்களுடன் வன்மையாகக் காணப்படும் மகிஷாசுரமர்த்தினியை எருமைத்தலை கொண்ட மகிஷாசுரன் கதாயுதத்துடன் எதிர்த்து நிற்கும் காட்சி யதார்த்தமாகச் செதுக்கப் பட்டுள்ளது. மகிஷாசுரனுக்கு ஆதரவாகப் பல அரக்கர்களும், சக்திக்கு ஆதரவாகப் பல பூத கணங்களும் காணப்படுகிறார்கள்.

### *வராக சிற்பத் தொகுதி*

வராக மண்டபத்தில் இருக்கும் நான்கு சிற்பத் தொகுதிகளில் ஒன்று திருமால் வராக அவதாரம் எடுத்து பூமிதேவியைக் காப்பாற்றி மேலே எடுத்துவருவது. பூமியை ஹிரண் யாட்சண் என்று அரக்கன் எடுத்துச் சென்று கடலுக்கு அடியில் ஒளித்துவைக்க, திருமால் பன்றி உருவெடுத்து கடலுக்கு அடியில் சென்று அரக்கனுடன் போரிட்டு, அவனைக் கொன்று, பூமிதேவியை மீட்டெடுத்து மேலே கொண்டுவரும் காட்சியே இங்கே காட்டப் பட்டுள்ளது.

வராகம் தன் காலை நாக அரசன்மீது வைத்திருக்கிறார். அவரது தொடையில், சற்றே வெட்கத்துடன், பூமிதேவி அமர்ந்திருக்கிறாள். அருகே ஒரு முனிவரும் ஒரு பெண்ணும் கைகூப்பி வணங்குகிறார்கள். பிரமன் ஒரு பக்கம் இருக்கிறார். அவர் அருகே ஒரு முனிவர் நிற்கிறார். சூரியனும் சந்திரனும் இரு பக்கங்களில் இருக்கிறார்கள்.

கீழிருந்து மேல்வரை வராகம் எடுத்திருக்கும் விசுவரூபம் சிற்பத்தில் கொண்டு வரப் பட்டுள்ளது.

***திரிவிக்கிரம சிற்பத் தொகுதி***

வராக மண்டபத்தில் காணப்படும் மற்றொரு சிற்பத் தொகுதி, திருமால் திரிவிக்கிரம அவதாரம் எடுப்பது.

மகாபலி ஒரு யாகம் செய்து அதன்மூலம் பெரும்பலம் பெறப் பார்க்கிறான். அதனால் பயந்த தேவர்கள் திருமாலை அணுக, அவர் வாமன அவதாரம் எடுத்து சிறு பையனாக வருகிறார். மகாபலியிடம் அவர் மூன்றடி மண் கேட்க அவன் கொடுப்பதாக வாக்களிக்கிறான். அந்தக் கணம் வாமனம் விசுவரூபம் எடுத்து மண்ணையும் வானையும் நிறைக்கிறார். அந்தக் கணத்தை அப்படியே பிடித்துச் சிற்பமாக் கியுள்ளனர் பல்லவ சிற்பிகள்.

திரிவிக்கிரமனின் ஒரு கால் வானை நோக்கிச் செல்கிறது. அந்தக் காலுக்குப் பூசை செய்கிறார் பிரமன். மறுபக்கம் சிவன் தெரிகிறார். தரையில் மகாபலியும் பிற அரக்கர்களும் திகைத்துப்போய் அமர்ந்திருக்கின்றனர். சூரியனும் சந்திரனும் இரு பக்கங்களிலும் கானப்படுகின்றனர்.

சென்னையில் இருந்து சுமார் 60 கி.மீ தொலைவிலும், பாண்டிச்சேரியில் இருந்து 130 கி.மீ. தொலைவிலும், திருச்சியில் இருந்து 250 கி.மீ தொலைவிலும் மாமல்லபுரம் அமைந்துள்ளது. ரயிலில் வருவோர் செங்கல்பட்டில் இறங்கிவிட்டால் அங்கிருந்து 30 கி.மீ தூரப் பயணம்தான்.

சென்னையின் பல இடங்களிலிருந்தும் நேராகப் பேருந்துகள் மாமல்லபுரம் வருகின்றன.

டிசம்பர், சனவரி மாதத்தில் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை சார்பில் நாட்டியவிழா ஒன்றும் மாமல்லபுரத்தில் நடத்தப்படுகிறது.

*வரலாற்றுத் தகவல்களை மாணாக்கர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு இப்பகுதி தமிழ்த்துறையால் வெளியிடப்படுகின்றது.*

**தகவலுக்காக நன்றி: *http://ta.wikipedia.org***

*தமிழ்த்துறையில் வாரம் இரண்டு நாட்கள் (செவ்வாய், வியாழன்) மாலை 4.00 மணிக்குப் **‘பொன்மாலைப்பொழுது’** என்ற கதை, கவிதை அரங்கேற்ற நிகழ்ச்சி நடைபெறும்.*

*மாதந்தோறும் மூன்றாவது வாரம் மாலை 3.00 மணிமுதல் **‘கவியரங்கம்’** நடைபெறும். படைப்புகளை அரங்கேற்ற விரும்புவோர் தங்களின் பெயர்களைத் தமிழ் விரிவுரையாளர்களிடம் முன்பதிவு செய்யவும்.*